# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 28.02.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 28.02.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.3111/2019/ஊ.வ.10 நாள்.27.09.2019 செயல்முறை ஆணையின்படி, இந்நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் அச்சிட்டு விநியோகிக்க சிட்டி கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்ட்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி 18 பாகங்களுக்கான புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் 50 பிரதிகள் (Single side-10, Double side-40) பிரிண்டிங் செய்து கொடுத்தமைக்காக மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.40,950/—ஐ மட்டும் வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. உள்ளாட்சித் தேர்தல் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதால், தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 26**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு 1 முதல் 18 வரையுள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள கடைகளுக்கு தொழில்வரி விதிக்கப்பட்டு, 01.04.2018—க்கு முன்னர் கடைகள் காலி செய்யப்பட்டது மற்றும் கடைகள் இடிக்கப்பட்டது விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| 2018—2019 | | | |
|---|---|---|---|
| வ.எண் | வார்டு எண் | வரி விதிப்பு எண்ணிக்கை | நிலுவை தொகை ரூ. (01.04.2018 முதல் |
| 1 | 3 | 6 | 3260 |
| 2 | 4 | 4 | 1515 |
| 3 | 5 | 1 | 280 |
| 4 | 8 | 5 | 3630 |
| 5 | 9 | 16 | 7620 |
| 6 | 10 | 10 | 4495 |
| 7 | 11 | 1 | 280 |
| 8 | 12 | 1 | 280 |
| 9 | 16 | 6 | 4430 |
| | மொத்தம் | 50 | 25790 |

| 2019—2020 | | | |
|---|---|---|---|
| வ.எண் | வார்டு எண் | வரி விதிப்பு எண்ணிக்கை | நிலுவை தொகை ரூ. (01.04.2018 முதல் |
| 1 | 3 | 6 | 3620 |
| 2 | 4 | 5 | 2430 |
| 3 | 5 | 1 | 310 |
| 4 | 8 | 5 | 6230 |
| 5 | 9 | 17 | 9080 |
| 6 | 10 | 10 | 5740 |
| 7 | 11 | 3 | 1370 |
| 8 | 12 | 1 | 310 |
| 9 | 13 | 1 | 310 |
| 10 | 16 | 6 | 6100 |
| 11 | 17 | 1 | 310 |
| 12 | 18 | 2 | 620 |
| | மொத்தம் | 58 | 36430 |

மேற்கண்ட பட்டியலின்படி, 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டுக்கான நிலுவை மற்றும் நடப்பு கேட்புகள் ரூ.62220/– ஐ (நிலுவை ரூ.25790/– + நடப்பு ரூ.36430/– ஆக மொத்தம் ரூ.62220/–) நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொழில்வரி நீலுவை மற்றும் நடப்பு நீக்கம் செய்யப்படாமல் உள்ளதை, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.350/2020/அ1)

**தீர்மானம் எண் – 27**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு 1 முதல் 18 வரையுள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள உரிமைதாரர்கள் பெயரில் விதிக்கப்பட்ட காலியிட வரி, பின்பு புதிய சொத்துவரி விதிக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள காலியிட வரியினை நீக்கம் செய்யப்படாமல் நிலுவை மற்றும் நடப்பு கேட்புகள் உள்ளன. காலியிட வரி நிலுவை 2018–2019 இரண்டாம் அரையாண்டு வரையிலும், நடப்பு 2019–2020 இரண்டாம் அரையாண்டு வரையிலும் கேட்புகள் ரூ.170259/– ஐ (நிலுவை ரூ.112099/– + நடப்பு ரூ.58160/– ஆக மொத்தம் ரூ.170259/–) நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி காலியிட வரி நீலுவை மற்றும் நடப்பு நீக்கம் செய்யப்படாமல் உள்ளதை, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.351/2020/அ1)

**தீர்மானம் எண் – 28**

**பொருள் : 4**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்கள் நாள்.27.01.2020–ன் ஆய்வுக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் Smart Card சிறப்பு முகாம் 07.02.2020–ம் நாளன்று ஒட்டன்சத்திரம் நகராட்சி சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு Smart Card வழங்க சிறப்பு முகாமிற்கு தேவையான மைக் விளம்பரம், மனுக்கள் பெற தேவையான கட்டமைப்பு வசதி(சாமியான பந்தல்) குடிநீர், நாற்காலி, மேஜைகள் போன்ற வசதிகள் செய்து கொடுக்க தெரிவிக்கப்பட்டதன்படி, 07.02.2020–ம் நாளன்று சிறப்பு முகாம் நடைபெற 2 நாள் ஆட்டோ மைக் விளம்பரம், சாமியான பந்தல், பிளக்ஸ் பேனர், குடிநீர் போன்றவை செய்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 29**

**பொருள் : 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.290 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ3) நாள்.22.11.2010–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 17349/2019/இ3 நாள். 16.10.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 25039–7/2019/டி.ஓ2 நாள். 18.10.2019–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 21.11.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில், மேற்படி பணிக்கு 14.02.2020–ம் நாள் மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், தி ஹந்து மற்றும் தினசெய்தி எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 29.01.2020–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.1,27,523/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 30**

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டு ஈப்பு வாகனம் எண்.TN 57 AW 2867 வாகனத்திற்கு பழுது நீக்கப்பணிகள் மேற்கொண்டமைக்காக AUTOMOTIVE MANUFACTURERS PVT LTD, Madurai என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.81,282/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி ஈப்பு வாகனத்திற்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகையினை தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 31**

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள புதிய கடை எண்.14–ன் கடை உரிமையாளர் கடை நடத்த இயலாமல் 30.09.2019–ம் நாளுடன் கடை ஒப்படைப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து, மேற்படி கடையின் உரிமம் ரத்து செய்யப்பட்டு மன்றத் தீர்மான எண்.260 நாள்.30.10.2019–ல் மேற்படி கடைக்கு பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்படி கடைக்கு செய்தி மக்கள் தொடர்பு துறை திண்டுக்கல் மூலம் 27.11.2019–ம் நாளில் தமிழக நியூஸ் தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்தும், மறு பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் 12.12.2019, 07.01.2020, 21.01.2020 மற்றும் 11.02.2020–ம் நாட்களில் மறு பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.அல்லிக்கொடி, உசிலம்பட்டி | 7227/– |
| 2 | திரு.எம்.பி.புதுராஜா, போத்தப்பட்டி, உசிலம்பட்டி | 6534/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி கூடுதல் தொகையாக உள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் உயர்ந்தபட்ச தொகை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் கடைக்கு பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் நான்கு அழைப்புகள் அனுப்பப்பட்டும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வராத நிலையில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கூடுதல் தொகைக்கு அளித்த வ.எண்.1 அளித்த ஒப்பந்ததாரருக்கு நகராட்சியின் வருவாயினை கருதி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்

**தீர்மானம் எண் – 32**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால் நகராட்சியால் நடத்தப்பட்டு வரும் வாரச்சந்தை தற்போது நகராட்சி எல்லை 1 வது வார்டு, சங்குப்பிள்ளை புதுார் புல எண் 2/3, 1/1பி , 2/1 மற்றும் 1/1ஏ–ல் குத்தகை அடிப்படையில் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி நில உரிமையாளர்களால் வரும் 31.03.2020–ம் நாளுடன் சந்தை இடத்தினை மாற்றி அமைத்து கொள்ள தெரிவித்ததை தொடர்ந்து ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 1 வது வார்டு பகுதியில் திரு.கே.சச்சிதானந்தம், த/பெ திரு.ஏ.எஸ்.கந்தசாமி கவுண்டர் மற்றும் திருமதி.கே.சாமியாத்தாள் க/பெ திரு.கந்தசாமி கவுண்டர் ஆகியோருக்கு சொந்தமான புல எண். 26,23/1,23/3 மற்றும் 23/2ஏ–ல் 5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் ஏற்பட்டதை தொடர்ந்து, மேற்படி வாரச்சந்தையில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள கீழ்க்காணும் பட்டியலில் உள்ள மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நாகணம்பட்டி சாலை புல எண்.26, 23/1, 23/,3 மற்றும் 23/2ஏ–ல் புதிய வாரச்சந்தையில் பாதுகாப்பு வேலி அமைத்தல் | 5.00 |
| 2 | புதிய வாரச்சந்தையில் கால்நடை இறக்க மேடைகள், தண்ணீர் தொட்டிகள் நிழற்குடை, குடிநீர் மின்விளக்கு ஒப்பந்ததாரர் கட்டண வசூல் மையம், கழிப்பிடம் அமைத்தல் | 5.00 |

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம்அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 33**

**பொருள் : 9**

இந்நகராட்சி பகுதியில் தானியங்கி குடிநீர் குறைந்த விலையில் வழங்கும் திட்டத்தின் கீழ் வார்டு எண்.3 (டிரசரி காலனி) புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்துதல் மற்றும் நாகணம்பட்டி சாலை புதிய வாரச்சந்தையில் அபிவிருத்தி பணி மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம்அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 34**

**பொருள் : 10**

இந்நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள 173 ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் எடுக்கப்படுகிறது.மேற்படி மோட்டர்கள் பழுது ஏற்பட்டால் உடனுக்குடன் பழுது பணிகள் மேற்கொள்ள போதைய பணியாளார்கள் இல்லாததால் மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோர அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 35**

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12 வது வார்டு நாயக்கனூர் பகுதியில் புல எண். 539/2–ல் உள்ள குளம் அமைந்துள்ள இடம் தொடர்பாக உரிமை கோரி நகராட்சிக்கு எதிராக திரு. வி. பழனிச்சாமி கவுண்டர் த/பெ. விருப்பண கவுண்டர் என்ற விருப்பண கவுண்டர் அவர்களால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு எண். 17/2012 ஆக வழக்கு தொடுக்கப்பட்டு வழக்கு நடைபெற்று வந்த நிலையில், 30.09.2016–ம் நாள் மாண்பைமிகு. நீதியரசர் அவர்களால் மேற்படி வழக்கில் நகராட்சிக்கு எதிராக தீர்ப்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி தீர்ப்புரையினை எதிர்த்து ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் பழனி சார்பு நீதிமன்றத்தில் தடையாணை மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு I.A No 590/2016 மற்றும் A.S.No 46/2016–ல் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்களால் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கினை எதிர்கொண்டு நீதிமன்றத்தில் உத்திரவு நகல் பெற்று தடையாணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், மேற்படி தீர்ப்புரையின் மீது பழனி சார்பு நீதிமன்றத்தில் தடையாணை மனு மற்றும் மேல்முறையீடு மனு செய்து வழக்கினை எதிர்கொண்டமைக்காகவும் மற்றும் தீர்ப்புரை ஆவணங்களுக்கான கட்டணங்களாக (ரூ.10,000 + 10,000) மொத்தம் ரூ.20,000/– மட்டும் வழங்கக் கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கினை எதிர்கொண்டு தீர்ப்புரை மற்றும் ஆவணங்களுக்கு வழக்கறிஞர் பட்டியல், தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 180/2012/இ1)

**தீர்மானம் எண் – 36**

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.11.07.2019 மற்றும் 15.07.2019–ன் பேரில் கீழ்க்காணும் 01/2020 மாத இதழ்கள் மற்றும் தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மாலை தமிழகம் | 14,700/– |
| 2 | மாலை மலர் (பொங்கல் மலர்) | 5,775/– |
| 3 | தினமலர் | 17,493/– |
| 4 | தினமணி (Express Publications) | 15,750/– |
| 5 | மாலை முரசு | 15,750/– |
| 6 | வணக்கம் இந்தியா | 3,325/– |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 37**

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019–2020–ம் ஆண்டிற்கான குடிநீர் பயன்பாட்டிற்கு தேவையான 33 சதவிகிதம் கொண்ட பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, 08.01.2020–ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் | கே,ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் (33 சதவீதம்) 25 கிலோ மூடை 1–க்கு | ரூ.47.16 | 49.20 |

மேற்காணும் 2 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றதில் கலம் எண்.1–ல் உள்ள ஜி.வி. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பயன்பாட்டின்அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிக்கான வினியோக உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 38**

**பொருள்– 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அடிப்படை கட்டமைப்பு திட்டம் 2019–20–ன் கீழ் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019–ல் 2 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.20308/2018/DO2 நாள்.18.10.2019–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் 2 சிப்பங்களுக்கும் 21.11.2019 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி 14.02.2020–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் 1 மதிப்பீடு ரூ.200.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தன், உத்தமபாளையம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 14.02.2020–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன்,<br>ஆண்டிப்பட்டி, தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.95 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன்,<br>உத்தமபாளையம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 10.00 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.95% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 20.02.2020 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் திட்ட பணியினை 30.04.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மானம் எண் – 39**

பொருள்– 15

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அடிப்படை கட்டமைப்பு திட்டம் 2019–20–ன் கீழ் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பபணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.16.10.2019–ல் 2 சிப்பங்களாக பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 2 சிப்பங்களுக்கான மதிப்பீடுகளுக்கும் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.20308/2018/DO2 நாள்.18.10.2019–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் 2 சிப்பங்களுக்கும் 21.11.2019 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி 14.02.2020–ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. சிப்பம் –2 மதிப்பீடு ரூ.100.00 இலட்சம் பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் திரு.டி.தமிழ்ராஜன், தேனி மற்றும் திரு.ஆர்.பரமானந்தன், உத்தமபாளையம், தேனி ஆகிய இருவரின் தகுதிக்காண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாளர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 14.02.2020–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது விபரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன்,<br>ஆண்டிப்பட்டி, தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.95 % அதிகம் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன்,<br>உத்தமபாளையம், தேனி | மதிப்பீட்டினைக்காட்டிலும் 10.00 % அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.டி.தமிழ்ராஜன், தேனி என்பவரின் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.95% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 20.02.2020 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.75 % உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் திட்ட பணியினை 30.04.2020–க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தனி அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2–ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.

<u>தீர்மானம் எண் – 40</u>

**பொருள் – 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால் நகராட்சியால் நடத்தப்பட்டு வரும் வாரச்சந்தை தற்போது நகராட்சி எல்லை 1 வது வார்டு, சங்குப்பிள்ளை புதூர் புல எண் 2/3, 1/1பி , 2/1 மற்றும் 1/1ஏ–ல் குத்தகை அடிப்படையில் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி நில உரிமையாளர்களால் வரும் 31.03.2020–ம் நாளுடன் சந்தை இடத்தினை மாற்றி அமைத்து கொள்ள தெரிவித்ததை தொடர்ந்து ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 1 வது வார்டு பகுதியில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு சொந்தமான 17 எக்கர் நிலத்தில் நகராட்சி வாரச்சந்தைக்கு 5 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்யக்கோரி கடிதம் அனுப்பப்பட்டத்தில், மேற்படி நிலத்தில் கடைகள் துவங்குவதற்கான பணிகள் நடைபெறுவதால், வாரச்சந்தைக்கு நிலம் ஒதுக்க இயலாது என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வாரசந்தைக்கு நிலம் வேண்டி அறிவிப்பு செய்யப்பட்டதில் நிலம் வழங்க தெரிவித்து திரு.வி.தனராஜ் காந்தி நகர், ஒட்டன்சத்திரம் என்பவர் புல எண்.272 –ல் நிலம் வழங்குவதாகவும் திரு.கே.சச்சிதானந்தம், த/பெ திரு.ஏ.எஸ்.கந்தசாமி கவுண்டர் மற்றும் திருமதி.கே.சாமியாத்தாள் க/பெ திரு.கந்தசாமி கவுண்டர் ஆகியோருக்கு சொந்தமான புல எண். 26,23/1,23/3 மற்றும் 23/2ஏ–ல் 5 ஏக்கர் நிலம் வழங்க ஒப்புதல் தெரிவித்து கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் திரு.வி.தனராஜ் காந்தி நகர் என்பவர் வழங்க தெரிவித்த புல எண். 272 நிலம் கொல்லப்பட்டி ஊராட்சி எல்லைக்குட்பட்ட நிலமாக இருந்ததால் மேற்படி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு திரு.கே.சச்சிதானம் , திருமதி .கே.சாமியாத்தாள் ஆகியோருக்கு சொந்தமான புல எண்.26,27/3பி,23/1,23/2 மற்றும் 23/3ஏ–ல் அவர்களுக்கு சொந்தமான சுமார் 11 ஏக்கர் நிலத்தில் 5 ஏக்கர் நிலத்தினை 3 மூன்றாண்டுகளுக்கு ஏக்கர் 1–க்கு ரூ.2.50 இலட்சம் வீதம் குத்தகைக்கு வழங்க வாரசந்தை நடத்த சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி நில உரிமையாளர்களை அழைத்து நகராட்சி வருவாய் செலவினங்களை கருதி குத்தகை தொகையினை குறைத்து வழங்க பேச்சு வார்த்தை நடத்தியதில் ஏக்கர் 1–க்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வழங்க சம்மதம் தெரிவித்து ஏற்பட்ட தீர்வு பேச்சில் உடன்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி நிலத்தில் வாரசந்தைக்கு தேவையான 5 ஏக்கர் நிலத்தை 01.04.2020 முதல் 31.03.2023 முடிய மூன்றாண்டுகளுக்கு ஏக்கர் 1–க்கு ரூ.2.00 இலட்சம் வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10.00 இலட்சம் குத்தகை அடிப்படையில் சந்தை நடத்திக்கொள்ள ஏற்பட்ட உடன்படிக்கைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சியால் ஞாயிறு மற்றும் வியாழக்கிழமை வாரச்சந்தைகள் நடத்த நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாத நிலையில் நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டும் சந்தைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நலன் கருதியும் நகருக்கு அருகாமையிலும் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் அருகாமையில் நகரின் பைபாஸ் சாலையின் முக்கிய வழித்தடத்தில் அமைந்துள்ளதால் தீர்வு பேச்சில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, 3 ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளவும், நிபந்தனைகளின்படி தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 41**

.

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தைப்பூசம்–2020 நகர் பகுதியில் குநீர் வசதி செய்ய 7 எண்ணம் 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி மேற்கொள்ள தொகை ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.15 நாள்.31.01.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 03.02.2020 –ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | மதிப்பீட்டு விலை |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 5.26 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் மதிப்பீட்டு விலைக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.முத்துக்கண்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 42**

**பொருள் : 18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தைப்பூசம்–2020 நகர் பகுதியில் பாதையாத்திரை பக்தர்களுக்கு தற்காலிக வேணல் பந்தல், குளியல் அறை மற்றும் கழிப்பறை வாடகை அடிப்படையில் அமைக்கும் பணி மேற்கொள்ள தொகை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தீர்மான எண்.15 நாள்.31.01.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 03.02.2020 –ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.29 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 3.50 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் 0.29% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.29% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 43**

**பொருள் : 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளம் பகுதியில் குவிந்துள்ள குப்பைகள், கழிவுமண் மற்றும் இதர கழிவுகளை அள்ளி அப்புறப்படுத்த தேவையான வாகனங்களுக்கு வாடகை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நாள்.03.02.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.11.02.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ. எண் | பொருள்கள் விபரம் | ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ் ஒட்டன்சத்திரம் ரூ | எவரஸ்ட் எர்த் மூவர்ஸ் ஒட்டன்சத்திரம் ரூ | எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கிட்டாச்சி மணி ஒன்றுக்கு (டீசல், ஆயில் மற்றும் டிரைவர் படி உட்பட) | 1800/– | 1820/– | 1850/– |
| 2 | ஜே.சி.பி மணி ஒன்றுக்கு ( டீசல், ஆயில் மற்றும் டிரைவர் படி உட்பட) | 925/– | 980/– | 950/– |
| 3 | டிப்பர் லாரி நடை ஒன்றுக்கு ( டீசல், ஆயில் மற்றும் டிரைவர் உட்பட குப்பை கொட்டும் இடம் எங்கள் பொறுப்பு ) | 870/– | 950/– | 920/– |
| 4 | டீப்பர் லாரி மண் 1 யூனிட் ரூ.1200/– (1 லாரி 4 யூனிட் = ரூ.4800/–) | 4800/– | 5200/– | 4000/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் கலம் எண் 1–ல் உள்ள விலைப்புள்ளிகளில் வ.எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவத்தின் விலைப்புள்ளி குறைவாகவும் கலம் 5–ல் உள்ள விலைப்புள்ளியில் வ.எண்.4 –ல் உள்ள பணிக்கு எம்.எம்.கே.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவன விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது.மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வ.எண் 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ் ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கும் வரிசை எண்.உள்ள பணிக்கு எம்.எம்.கே. கன்ஸ்ட்ரக்சன் ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கும் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கவும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 44**

**பொருள் : 20**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019–2020ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2020–21–ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 45**

**<u>பொருள் : 21</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 வது வார்டு சாய்பாபா கோவில் அருகில் உள்ள நுண் உரக்கூடத்தில் (MCC Center) உள்ள இயந்திரங்கள் மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ள தீர்மான எண்.23 நாள்.31.01.2020–ம் நாள் தனிஅலுவலர் அவர்கள்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ள ரூ.0.70 இலட்சம் மதிப்பீட்டில் 03.02.2020 –ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.03 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2. | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 2.33 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்தாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் 0.03 % மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 46</u>**

**<u>பொருள் : 22</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021-ம் ஆண்டிற்கு அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள கணிணிகள், பிரிண்டர்களுக்கான உபகரணங்கள், புதிய பிரிண்டர்கள் மற்றும் கணிணிகள் வாங்கிக் பயன்படுத்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.80 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 47</u>**

**<u>பொருள் : 23</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் முதலானவைகள் கூட்டுறவு அச்சகம் மூலம் கொள்முதல் செய்து மற்றும் அச்சடித்து பெறவும் அதற்கான செலவினத் தொகை ரூ.9.80 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 48</u>**

**<u>பொருள் : 24</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அலுவலக பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கான பயணப்படி செலவினமாக உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 49</u>**

**பொருள் : 25**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக பதிவேடுகள், கோப்புகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் நீண்ட காலம் பராமரிக்கப்பட வேண்டியுள்ளதால் மேற்படி ஆவணங்களை முறையாக பைண்டிங் செய்து பராமரித்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.80 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 50**

**பொருள் : 26**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டுகளில் திட்டப்பணிகள், குடிநீர், பொதுசுகாதாரம் மற்றும் இதரப்பணிகளுக்காக புகைப்படங்கள், கலர் பிரிண்ட், ஆல்பம், வீடியோ கவரேஜ் மற்றும் கலர் ஜெராக்ஸ் முதலான பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00/– இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 51**

**பொருள் : 27**

.

ஆரசாணை (நிலை) எண்.181 நாள். 19.09.2008–ன்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சி சொந்தமான (சி.கிரேடு) பேருந்து நிலையத்தினுள் வரும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டண வசூல் செய்யும் உரிமை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 25.01.2019–ம் நாள் கோரப்பட்டு உயர்ந்தபட்ச ஏலதாரரான திரு.கே.ரகுபதி, த/பெ.பெருமாள்சாமி, பெரியகோட்டை என்பவருக்கு 3 ஆண்டுகளுக்கான உரிமையின்படி, முதலாம் ஆண்டு உத்தரவு வழங்கப்பட்டு, 31.03.2020–ம் நாளுடன் முடிவுற்ற நிலையில் அன்னாருக்கு இரண்டாம் ஆண்டு புதுப்பித்தலுக்கான அறிவிப்பு அனுப்பப்பட்டு தொகை செலுத்த தவறியதால், அன்னாரின் உரிமைத்தை ரத்து செய்து மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. இரண்டாம் ஆண்டு குத்தகை செலுத்த அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் நெரில் அறிவுறுத்தியும் குத்தகைதாரர் தொகை செலுத்த தவறியதால் அரசாணை மற்றும் ஏல நிபந்தனைகளின்படி, மறுபொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 52**

**பொருள் : 28**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகம் மற்றும் அம்மா உணவகம் முதலானவைகளின் சுகாதாரம் மற்றும் பிற பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் 2020–2021ம் ஆண்டிற்கு வாங்கிக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00/– இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 53**

**பொருள் : 29**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டிற்கான பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான 25 சதவிகித குளோரின் கொண்ட கிருமி நாசினி 5 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் பொதுச்சுகாதாரம் தேவையின் அவசர அவசியம் கருதி வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 54**

**பொருள் : 30**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டிற்கான குடிநீர் விநியோக பயன்பாட்டிற்கு தேவையான 33 சதவிகித குளோரின் கொண்ட கிருமி நாசினி பிளீச்சிங் பவுடர் 8 மெட்ரிக் டன் குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 55**

**பொருள் : 31**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டிற்கு பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான 20 மெட்ரிக் டன் நீர்த்த சுண்ணாம்புத்தூள் பொது சுகாதார உபயோகத்திக்கு உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 56**

**பொருள் : 32**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021ம் ஆண்டு பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான கருப்பு பினாயில் 4000 லிட்டர் பொது சுகாதார உபயோகத்தின் அவசர அவசியம் கருதி வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 57**

**பொருள் : 33**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டிற்கு பொது சுகாதாரம் பயன்பாட்டிற்கு தேவையான கொசு புலு மருந்து டேமிப்பாஸ், புகை தெளிப்பு மருந்து பைரித்ரம், டெக்னிக்கல் மாலத்தியான் மற்றும் கழிவு நீர் வாய்கால் கொசுக்களுக்கு உரிய மருந்து Tamilnadu Medical Service Corporation, Chennai மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்கப்பட்ட நிறுவனம் மூலம் வாங்கிக்கொள்ள பொது சுகாதார உபயோகத்தின் அவசர அவசியம் கருதி வாங்கிக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் மன்றப்பொருள்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 58**

**பொருள் : 34**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020–2021–ம் ஆண்டிற்கு பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பயன்பாடு முதலானவைகளுக்கு 8 வாகனங்கள் இயங்கி வருகிறது. மேற்படி வாகனங்கள் பராமரிப்பு பணி மேற்கொண்டு வட்டார போக்குவரத்து ஆண்டு தகுதி சான்று (Fitness Certificate) பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.12.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 59**

**பொருள் : 35**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ் 15.05.2013 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படியும், அரசாணை (பத்தாண்டு) எண் 21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 1) துறை நாள். 17.01.2013, அரசாணை (நிலை) எண் 79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை நாள். 31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண் 118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந) துறை, நாள். 26.09.2014ன்படியும் அம்மா உணவகம் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி உணவகத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளவாறு 2020–2021–ம் ஆண்டிற்கான தேவைப்படும் டோக்கன்களை கூட்டுறவு அச்சகம் வாயிலாக அச்சடித்துப் பெறவும், மேற்படி உணவகத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளவாறு (1) மளிகைப் பொருட்கள் விநியோகம் செய்ய மேலாளர், அபிராமி கூட்டுறவு பண்டக சாலை, திண்டுக்கல், (2) மான்ய விலையில் அரிசி விநியோகம் செய்ய மண்டல துணை இயக்குநர், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, திண்டுக்கல், (3) உணவகத்திற்கு தேவையான தயிர் தினசரி விநியோகம் செய்ய பொது மேலாளர், மாவட்ட கூட்டுறவு பால் வள ஒன்றியம், திண்டுக்கல் மற்றும் (4) அன்றாடம் தேவைப்படும் காய்கறி வகைகளை வெளிச்சந்தையில் அன்றைய விலையில் கொள்முதல் செய்து கொள்ளவும், (5) மேற்படி உணவக வளாகத்தினை தூய்மையாக வைத்திருக்க தேவையான இதர பொருட்களை வெளிக்கடைகளில் கொள்முதல் செய்து கொள்ளவும், (6) மேற்படி உணவகத்திற்கு தேவையான கேஸ் சிலிண்டர்களை பாரத் பெட்ரோலியம் லிமிடெட் கிளை நிறுவனமான, வேல் பாரத் கேஸ் ஏஜென்சீஸ், ஒட்டன்சத்திரம் மூலம் தேவைக்கேற்ப வாங்கிக்கொள்ளவும், மேலும், உணவகத்தில் பணிபுரியும் தாய் மகளிர் சுய உதவிக்குழு 12 பணியாளர்களுக்கு தினக்கூலி விகிதத்தில் கூலி முதலான செலவினங்களை 2020–2021–ம் ஆண்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 60**

**பொருள் : 36**

இணை இயக்குநர், நகர்ஊரமைப்பு, மதுஜர அவர்களால் புதியதாக மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவுகளில் பொது ஒதுக்கீட்டுக்கான இடங்கள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை பாதுகாப்பு செய்யும் பொருட்டு, 1 முதல் 9 வார்டுகளில் உள்ள பொது இடங்களில் முற்கம்பி வேலி அமைத்து பாதுகாப்பு வெளி அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொது இடங்களை பாதுகாக்கவும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்படி செலவினத்தை நகராட்சியின் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 61**

**பொருள் : 37**

இணை இயக்குநர், நகர்ஊரமைப்பு, மதுஜர அவர்களால் புதியதாக மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவுகளில் பொது ஒதுக்கீட்டுக்கான இடங்கள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை பாதுகாப்பு செய்யும் பொருட்டு, 10 முதல் 18 வார்டுகளில் உள்ள பொது இடங்களில் முற்கம்பி வேலி அமைத்து பாதுகாப்பு வெளி அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொது இடங்களை பாதுகாக்கவும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்படி செலவினத்தை நகராட்சியின் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 62**

**பொருள் :38**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2019–20 ஆண்டுக்கான 01.01.2020 முதல் 28.02.2020 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0549 முதல் RF0645 முடிய, WS0139 முதல் WS0166 முடிய மற்றும் TFV058 முதல் TFV070 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மானம் எண் – 63**